விஷு ௵ மாசி ௴ 1உ

1942-10

42 325

THE MADURA TAMIL SA

உ

ஓம் குஹாய நம:

# திருப்புகழமிர்தம்

(மாத வெளியீடு)



திருப்புகழ் தொண்டன்

கிருபானந்தவாரி

வாக்கிற்கு அருணகிரி — கருணைக்கு அருணகிரி

திருப்புகழமிர்தம் ஆபீஸ்,
108, சாமிநாய்க்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

G DARAN'S ENGRAVERS MADRAS

வருட சந்தா ரூ 1-4-0. தனிப்பிரதி அணா 2

ஓம் குஹாய நம :

# பொருளடக்கம்


திருப்புகழ் (திருவேங்கடம்) சாந்தமில் 237
திருப்புகழ் ஸ்வரம்
மனறலங்கொந்து 243
சாந்தமில் 244
கந்தரலங்காரம் (சுழித்து) 245
சிவானந்தலஹரீ 247
கந்தர்திருவிளையாடல் 248
கற்பு 253
முருகரும் தமிழும் 255


## சைவப் பழம் உதிர்ந்தது

தமிழ்நாடெங்கும் தமது புகழ் மணத்தைப் பரப்பி, தெய்வ ஒளியைப் பெருக்கி, அறியாமைப் பேரிருளைச்சுருக்கி, சிவநெறியைக்காட்டிய, திருப்பாதிரிப்புலியூர், ஞானியார் மடாலயம் ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முகமெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளது பெருமை மண்ணும் விண்ணும் அறிந்ததே. இத்திருவருட்பெரியார் இந்தலோகத்தில் பிரசங்கமாரி செய்ததுபோல் கந்தலோகத்திலும் செய்யும்பொருட்டு தமது பூதஉடம்பை விடுத்தேகியதைக் குறித்துப் பெரிதும்வருந்துகிறோம்.

பத்திராதிபர்.


## நம்பிக்கைப்பெற்ற ஆயுர்வேத ஔஷதங்கள்.




ஸோல்ஏஜண்ட்ஸ் யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்.

ஆதிகாலத்து
ஒரிஜினல் நெய்மிட்டாய்க்கடை
No. 72 கீழாவணிமூல வீதி,
மதுரை.

N. B. எங்கள் O. M. K. நல்லஎண்ணெயை உபயோகியுங்கள்.

உ

ஓம் குஹாய நம:

# திருப்புகழமிர்தம்

(All Rights Reserved)

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்."

மலர் 6. Vol. 6.

விஷு ஸு மாசி மீ 1௳
பிப்ரவரி 1942

இதழ் 11. No. 11.

## திருப்புகழ்.

### திருவேங்கடம்

சாந்தமில் மோகவெரி காந்திய வாவனில
மூண்டவி யாதசம யவிரோத
சாங்கலை வாரிதியை நீந்தவொ ணாதுலகர்
தாந்துணை யாவரென மடவார்மேல்
ஏந்திள வார்முளரி சாந்தணி மார்பினொடு
தோய்ந்துரு காஅறிவு தடுமாறி
ஏங்கிட ஆருயிரை வாங்கிய காலன்வசம்
யான்தனி போய்விடுவ தியல்போதான்
காந்தளி னனகர மான்தரு கானமயில்
காந்தவி சாகசர வணவேளே
காண்டகு தேவர்பதி யாண்டவ னேசுருதி
யாண்டகையே யிபமின் மணவாளா
வேந்தகு மாரகுக சேந்தம யூரவட
வேங்கட மாமலையி லுறைவோனே
வேண்டிய போதடியர் வேண்டிய போகமது
வேண்டவெ றாதுதவு பெருமாளே.

## பதவுரை.

காந்தளின் ஆனகர - காந்தள் மலரைப் போன்ற திருக் கரத்தை யுடையவரே! மான்தரு - மானால் தரப்பட்ட, கான மயில் - காட்டில் வாழ்ந்த மயிலைப் போன்ற சாயலையுடைய வள்ளி யம்மையாருடைய, காந்த - கணவரே! விசாக - விசாக நட்சத்திரத்திலே அனற் பிழம்பாக வெளிப்பட்டவரே! சரவண - சரவண தடாகத்தில் தோன்றினவரே! வேளே - எல்லோராலும் விரும்பத்தக்கவரே! காண்தகு தேவர் பதி ஆண்டவனே - பார்ப் பதற்குத் தகுதியான (பேரழகுடைய) பொன்னுலகத்தை (அசுர ரிடமிருந்து மீட்டு) ஆட்கொண்டவனே! சுருதி ஆண் தகையே - வேதங்களால் துதிக்கப்பெற்ற சிறந்த வீரரே! இபமின் மண வாளா - தெய்வயானை யம்மையாருடைய கொழுநரே! வேந்த - அரசரே! குமார - என்றும் மகலாத இளமையுடையவரே! குக - ஆன்மாக்களின் இதய குகையில் உறைபவரே! சேந்த - சேந்தரே! மயூர - மயில்வாகனத்தை யுடையவரே! வடவேங்கட மா மலை யில் - தமிழ் நாட்டிற்கு வட எல்லையாகவுள்ள திருவேங்கடம் என்னும் பெருமை தங்கிய திருமலையில், உறைவோனே - எழுந் தருளியவரே! அடியர் - திருவடிக்குத் தொண்டு பூண்ட அடியவர் கள், வேண்டிய போது - விரும்பிய சமயங்களிலெல்லாம், வேண் டிய போகம் அது - விரும்பிய போகபாக்கியங்களை, வேண்ட - அவர்கள் விரும்பிக்கேட்க, வெருது உதவும் - வெறுக்காமல் வழங்கியருள் புரிகின்ற, பெருமாளே - பெருமையின் மிக்கவரே! சாந்தம் இல் - பொறுமை சிறிதுமில்லாத, மோக எரி காந்தி - மோகத்தினா லுண்டாகிய நெருப்பு மிகவும் வெப்பத்தைச் செய் யவும், அவா அனிலம் மூண்டு - ஆசையாகிய பெருங்காற்று மிகுந்து வீசவும், அவியாத - ஒரு போதும் ஓயாத, சமய விரோத - "என் சமயம் மெய், உன் சமயம் பொய்" என்று வாதிட்டு போரா டிப் பகை கொள்ளச் செய்யும், சாம் கலை - அழிகின்ற சாத்திர மாகிய, வாரிதியை - பெருங்கடலை, நீந்த ஒணாது - கடக்க முடி யாது, உலகர் தாம் துணை ஆவர் என - உலகிலுள்ள மனைவி மக் கள் தமர் நண்பராதியோர் ஆவிக்குத்துணை செய்வர் என்று நம்பி யும், மடவார் - பெண்களுடைய, மேல் ஏந்து - உடலில் தாங்கிக் கொண்டிருப்பதும், வார் - இரவிக்கையுடன் கூடியதும், முளரி - தாமரை மொட்டைப்போல் இருப்பதும், சாந்து அணி - சந்தனக் கலவை தரித்துக் கொண்டிருப்பதுமாகிய, இளமார்பின் ஒடு தோய்ந்து - தனங்களுடன் கலந்து, உருகா - உள்ளம் உருகி, அறிவு தடுமாறி - புத்தி தடுமாற்றத்தை யடைந்து, ஏங்கிடவும் - ஏக்கத்தையடைந்தும் உள்ள அடியேனுடைய, ஆர் உயிரை - அருமையான ஆவியை, வாங்கிய காலன் வசம் - பற்றிய காலு

னுடைய வசப்பட்டு, யான் தனி போய் விடுவது - அடியேன் துணையின்றி தனித்து நரக லோகத்திற்குப் போய் விடுவது இயல்போ தான் - தகுதியாகுமோ?

## பொழிப்புரை.

காந்தள் மலர் போன்ற திருக்கரங்களை யுடையவரே! மான் பெற்ற மயில் போன்ற வள்ளி பிராட்டி யாருடைய மகிணரே! விசாகரே! சரவணப் பொய்கையில் தோன்றிய வரே! யாவராலும் விரும்பப்படுகின்றவரே! பார்க்கத்தக்க தாகிய தேவலோகத்தை சூராதி யவுணரிடமிருந்து மீட்டு காப்பாற்றியவரே! வேதங்களால் துதிக்கப் பெற்ற சிறந்த வீரரே! தெய்வயானை யம்மையாருடைய கணவரே! எப் பொருட்கு மிறைவரே! என்று மிளையவரே! ஆன்மாக்க ளுடைய உள்ளக் குகையில் உறைபவரே! சேந்தரே! மயில் வாகனரே! வடதிசையிலுள்ள திருவேங்கட மாமலையில் வாழ்பவரே! அடியார்கள் வேண்டிய போதெல்லாம் வேண்டிய போகங்களை வேண்டும்போது வெறுக்காமல் வழங்கியருள் செய்கின்ற பெருமித முடையவரே! பொறுமை என்பது சிறிதுமில்லாமல் மோகமாகிய தீ மூண்டு வெப்பத்தை யுண்டு செய்யவும், ஆசையாகிய சண்ட வாயு வீசவும், ஒருபோதும் ஓயாத விரோதத்தை யுண்டுபண்ணும் அழிகின்ற சமயக் கலைகளாகிய கடலைக் கடக்க வொண்ணுது; (என உணராது அதில் சுழன்றும்) உலகிலுள்ள மனைவி மகார் சுற்றம் நண்பராதியோரை உயிர்க்குத் துணையென எண்ணியும், கச்சணிந்து களபங் களை யணிந்து தாமரை மொட்டை யொத்து இருக்கும் பெண்களுடைய இளமுலைகளிற் கலந்தும், (காமாக்கினி யால்) உள்ளம் உருகியும், அறிவு தடுமாற்றத்தை யடைந் தும் அடியேன் ஏங்கியிருக்கும் வேளையில் எனது அருமை யான ஆவியைக் காலன் வந்து பற்றிக்கொண்டு செல்ல, அடியேன் அவன் வசப்பட்டு தனியே நரகக்குழியை நாடிச் சென்றுவிடுவது தக்கதாமோ?

## விரிவுரை.

சாந்தமில் :—

சாந்தம் - பொறுமை, மனிதனுக்குச் சிறந்த அணி கலன் பொறுமையேயாம். தவமென்னும் பைங்கூழைச்

செய்வதற்கு பொறை யென்னுந் தண்ணீர் இன்றியமையாததாம். பொறுமையின்றி பிறர் குற்றத்தைக் கண்டு சினங்கொண்டால் பல நாள் பாடு பட்டுச் செய்த தவம் ஒரு கணத்தில் அழிந்து போம். பொறையின்றி கோபத்தினுல் கௌசிக மாதவன் பல்லாயிர மாண்டுகள் வருந்திச் செய்த நற்றவத்தை வறிதாக்கினன். இவ்வரிய கருத்தை நம் வள்ளுவர் "பட்டினி கிடந்து தவம் செய்வோர் மிகவும் பெரியவர்; ஆனுல் அவர் பிறர் கூறும் கடுஞ்சொல்லைக் கேட்டுப் பொறுக்குஞ் சாந்த சீலருக்குப் பின்னிற்பவர் தான். உண்ணுது நோற்பாரினும் பெரியர் பொறுமையுடையரே" என்றும் மிக அழகாக உபதேசிக்கின்றுர். அதன் ஆழத்தையும் அருமையையும் சிறிது உற்றுப் பார்ப்பார் சாந்த சீலராக வாழ்வார் என்பதில் என்ன தடை?

> உண்ணுது நோற்பார் பெரியர்; பிறர் சொல்லும்
> இன்னுச் சொல் நோற்பாரிற் பின்.

**மோக எரிசாந்தி:**—மோகம் - இது உட்பகை ஆறில் ஒன்று. இதைப் பெருந் தியாக உருவகப் படுத்தினுர்.

**அவா அனிலம்:**—மோகமாகிய தீயை வளர்ப்பதற்கு ஆசையாகிய காற்றும் துணை செய்கின்றது. அதனுல் மோகத்தீ மிகவும் மூண்டெரிய ஆரம்பித்து விட்டது.

> "ஆசை யாகிய பெருங் காற்றூடு"

என்றுர் தாயுமானுர்.

**அவியாத சமய விரோத சாங்கலை:**—சமய சாத்திரங்கள் ஒன்ருேடொன்று பகைத்து நிற்பன. அச்சமய வெறி கொண்டோரும் ஒருவரை யொருவர் தாக்கி உள்ளும் புறம்பும் பகைத்து அமைதி யின்றி அலைந்துழல்வர்.

> "கலைகொடு பவுத்தர்காம கருமிகள் துருக்கர்மாய
> கபிலர்பக ரக்கணுதர் உலகாயர்
> கலகமிடு தர்க்கர் வாம பயிரவர் விருத்தரோடு
> கலகலென மிக்க நூல்கள் அதனுலே
> சிலுகி எதிர் குத்தி வாது செயவொரு வர்க்குநீதி
> தெரிவரிய சித்தியான உபதேசந்
> தெரிதர விளக்கி ஞான தரிசன மளித்துவீறு
> திருவடி யெனக்கு நேர்வ தொருநாளே"

> "பல்லத்த மார்க்கர் வல்லர்க்கர் மூர்க்கர்
> கல்விக்கலாத் தலையலாமோ"

"சினமுடன் தர்க்கித்துச் சிலுக்கொண்
டறுவருங் கைக்குத்திட் டொருவர்க்குந்
தெரிவருஞ் சத்யத்தை"

"சதுர சங்க சாகர மென முழங்கு வாதிகள்
சமய பஞ்சபாதக ரறியாத"

—திருப்புகழ்.

**உலகர் தாந்துணை யாவரென:**—என்றுந் துணையாக நின்று நல்லருள் புரியும் இறைவனைத் துணைகொள்ளாது, "நாய்வாலைப் பற்றிக்கொண்டு நதியின் வெள்ளத்தைக் கடக்க நினைந்தவனைப் போல்" உலகிலுள்ள மனைவிமக்கள் முதலியோரை நான் துணையென்று எண்ணவும், அவர் எனைத் துணை யென்றெண்ணவும் நின்று முடிவில் வறிதே அழிகின்றேன் என்று குறிப்பிடுகின்றார்.

**யான் தனி போய்விடுவ தியல்போதான்:**—காலன் வசப் பட்டுப் போகும்போது, உடம்போடு கூடியிருந்தபோது அறத்தையும் அருந்தவத்தையுஞ் செய்யாதோர், தனித்துச் செல்வர் எனக் குறிப்பிடுகின்றார்.

**காந்தளி னுனகர:**—காந்தள் - கார்த்திகைப்பூ. இப்பூ கரத்திற்கு உவமையாகக் கூறுவது மரபு. திருவீழி மிழலை யில் மேகம் முழங்குகின்றது; பல மயில்கள் அம்மேகத் தைக் கண்டு மகிழ்ந்து தோகையை விரித்து ஆடுகின்றன; வண்டுகள் இன்னிசை பாடுகின்றன; கொன்றைமலர் உதிர் கின்றன; காற்றினால் உதிர்ந்த மலர்கள் ஆங்கு பூத்திருக்கும் காந்தண் மலரில் வீழ்கின்றன. அது பெரிய சதிர் போல் இருக்கின்றது; மேகமென்னும் ஒருவன் மத்தளம் வாசிக்க, வண்டு என்னும் நட்டுவன் பாட, மயில்கள் என்னும் பெண்கள் சதிராட, அதற்குப் பரிசாக கொன்றை மரங்கள் தம்மிடம் பூத்துள்ள தங்கக் கட்டிகள் போன்ற மலரை வீச, அப்பொற் கட்டிகளை காந்தள் மலர்களாகிய கரங்கள் வாங்குகின்றன. என்ன அழகிய வர்ணனை? என்னே இயற் கையின் அமைப்பு? அதன தாண்டவம் இப்படி என்றும் ஓவாது நிகழ்கின்றது. இதனை நம் இயற்கை யாசிரிய ராகிய திருஞான சம்பந்தர் கூறுமாறு காண்க.

"வரைசேரு முகின்முழவ மயில்கள்பல நடமாட வண்டுபாட
விரைசேர் பொன்னிதழிதர மென்காந்தள் கையேற்கு மிழலை
யாமே"

**மான் தரு கான மயில்:**—மான் வயிற்றிலே ஒரு மயில் பிறந்தது என்றார்; அந்தப்பதங்கள் என்ன அழகாக அமைந்

திருக்கின்றன என்பதனை அன்பர்கள் உற்றுப் பார்த்து மகிழ்க. பலமுறை சொல்லி நா இன்புறுக. மான் என்பது இலக்குமி; மயில் என்பது வள்ளியம்மை; உவம ஆகு பெயராக இரண்டும் நிற்கின்றன; இனி வள்ளி மலையில் தவம் புரிந்து கொண்டிருந்த திருமாலின் அவதாரமாகிய சிவ முனிவருக்கு முன்னே இலக்குமி தேவி மான் வடிவு தாங்கிவர, அம்முனிவர் கண்ணுற் புணர, மான் கருக்கொண்டு உலகீன்ற அன்னையாகிய பச்சைப் பசுங் குழவியை வள்ளிக் குழியில் ஈன்றது. என்ற வரலாற்றையும் அது குறிப்பிடுகின்றது.

"மாமுனிவன் புணர் மானுதவுந் தனி
மானை மணஞ் செய்த பெருமாளே"
—திருப்புகழ்.

குமார:—குமார சப்தத்திற்குப் பொருள் மலர் 4 பக்கம் 174-ல் காண்க.

சேந்த:—செம்மைப் பண்புடையவன்.

வேங்கடமா மலையிலுறை வோனே:-தற்போது விஷ்ணு ஸ்தலமாக விளங்குகின்ற திருவேங்கடமலை முருக க்ஷேத்திரமுமாகும்.

## வடவேங்கடம்

திருவேங்கடம் என்னும் வானமளாவிய வளமலிமா மலை தமிழ் நாட்டிற்கு வடவெல்லையாகத் திகழ்வது.

"வடவேங்கடம் தென் குமரி யாயிடைத்
தமிழ் கூறு நல்லுலகத்து" —பனம்பாரனர்

இத்தகைய திருமலையில் பண்டைக் காலத்தில் திருமால் கோயிலும் திருமுருகன் கோயிலும் இருந்திருத்தல் வேண்டும். அருணகிரி நாதரே இரண்டுங் கூறுகின்ருர். "திருவேங்கட மாமலை மேவிய பெருமாளே" என்று முருக க்ஷேத்திரமாகவும், "உலகீன்ற பச்சை யுமையணன் வடவேங்கடத்தி லுறைபவன் உயர்சார்ங்க சக்ர கரதலன் மருகோனே" என்று திருமால் திருத்தலமாகவும் கூறுகின்றனர். இதனை நுனித்து நோக்க அம்மலையில் திருமாலும் திருவேலிறைவனும் திருக்கோயில் கொண்டிருக்கின்றனர் என்பது விளங்குகின்றது.

இதுவேயுமன்றி ஆழ்வாராதிகளும் அங்குள்ள திருமாலைப் பாடியருளியதாலும், கந்தபுராணம் வழிநடைப் படலத்தில்,

அண்ட மன்னுயி ரீன்றவ ளுடன் முனிவாகித்
தொண்ட கங்கெழு சுவாமிதன் மால்வரை துறந்து
மண்டுபாதலத் தேகியே யோர் குகை வழியே
பண்டு தான்வரு வேங்கட கிரியையும் பார்த்தான்

என வருவதனுலும் இரு கடவுளரும் இருந்தனரெனத் தோன்றுகின்றது.

திருப்பதி மலையின் மேலுள்ள சுவாமி புஷ்கரணி, வில் வார்ச்சனை, "பாலாஜி" என்னும் வழக்கு இவைகளும் முருக க்ஷேத்திரம் என்பதனை வலியுறுத்துகின்றன. பல மாறுதல் உண்டாவது உலக வழக்கே யாதலின் முருகனுலயம் மறைந்தோ மாறியோ போய்விட்டது.

**வேண்டிய போதடியர்........வேறுதுதவு** :—முருகக் கடவுள் அன்பர்கள் விரும்பிய அனைத்தும் விரும்பியபோதெல்லாம் வெறுக்காமல் தரும் வள்ளல்.

"யார் வேண்டினுலுங் கேட்ட பொருளீயும்
த்யா காங்கசீ லம்போற்றி"

"வேண்டு மடியர் புலவர் வேண்ட அரிய பொருளை
வேண்டு மளவி லுதவும் பெருமாளே"

"அடியவ ரிச்சையி லெவை யெவை யுற்றன
அவை தருவித் தருள் பெருமாளே"

என்ற அமுத வாக்குகளை உன்னுக.

## கருத்துரை.

வள்ளி மணவாள! விசாகா! சரவண! வடவேங்கடத்தில் வாழும் வள்ளால்! மோகாசையால் வாடி வறிதே அடியேன் காலன் வசப்பட்டு மடியாவண்ணம் ஆட்கொள்வீர்.

## திருப்புகழ் ஸ்வரம்

### இராகம். நாதநாமக்ரியா ஏக தாளம்.

ஸ ரிமா ம மமம மமமா க ம ப க
மன்ற லங்கொந்துமிசை தெந்தனந் தெந்தனெ ன
, கம பா ப த ப ம க ம ப த பமபா பாபப
வண்டி னங்கண்டுதொடர் குழல்மா . த . . . ர்
ப தஸ்ா நி ஸ் ததபத நி த ப மப தபம
மண்டிடுந் தொண்டை யமு தூண் டுகொண் . டன் புமிக
ஸ ரி ப ம க மக ரி ஸரிமா கரிரீ ஸா , ,
வம் பிடுங் . கும்ப கன த ன மா . . . ர்பில்

இராகம். நாதநாமக்ரியா. ஆதி தாளம்.

(15-வது மேளம்) ஆ. ஸரிமகமபதநிஸ். அ. ஸ்நிதபமகரிஸ.

| | | |
|---|---|---|
| ,,, ஸரிமமா மாமா, மாபமகா | ஸா, கமப தா | பா, ம கா ரீ |
| ஸா . ந்தமில் மோ க வெ . . ரி | . கா . ந்தி ய | வா வ னி ல |
| ஸா, கா க கா மபமப கா ரீ ஸா | ,,, ஸ ரி பமமா ம | பதபத பா பா பா |
| . மூண் ட வி யா . . . . . த | ச ம ய . . வி | ரோ . . . . . த |
| ,,, தா த தா நீ , நிஸ்ா ஸ்ா | ,,, ஸ்ா ஸ் ஸ்ா | நி ஸ் தா , பதபதநீ |
| சாங் க லை வா ரி தி யை | நீந் த வொ | ஞு . து ல . க . ர் |
| ,,, ஸ்ா ஸ்ரீ ஸ்ரிகா , ரிஸ்ா ஸ்ா | ,,, நி தா ப ம | கமபம க மகரி |
| தாந் துணை யா . . வ ரெ ண | ம ட வா . | . . . ர் மே . . . |

ஸ நீ
. ல்

உ

ஓம் குஹாய நம:

# கந்தரலங்காரம்

(28 ம் பக்கத் தொடர்ச்சி)

சுழித்தோடு மாற்றிற் பெருக்கா னதுசெல்வந் துன்பமின்பங்
கழித்தோடு கின்றதெக் காலநெஞ்சே கரிக் கோட்டுமுத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோட னென்கிலை குன்றமெட்டும்
கிழித்தோடு வேலென் கிலைஎங்ங னேமுத்தி கிட்டுவதே. **(36)**

## பதவுரை.

நெஞ்சே - ஓ மனமே! செல்வம் - செல்வமானது, சுழித்து ஓடும் - சுழித்துக்கொண்டு ஓடுகின்ற, ஆற்றில் பெருக்கு ஆனது - நதியின் வெள்ளத்திற்கு நிகராகும், துன்பம் இன்பம் - (அச்செல்வத்தினா லுண்டாகும்) துன்பங்களையும் இன்பங்களையும், ஒழிந்து - அறவே நீக்கி, ஓடுகின்றது எக்காலம் - பற்றற்று விரைந்து செல்வது எந்தக் காலமோ? கரி கோடு முத்தை - யானையின் தந்தத்தில் உண்டாகிய முத்துக்களை, கொழித்து ஓடும் - கொழித்துக் கொண்டு ஓடுகின்ற, காவிரி - காவிரி நதியாற் சூழப்பட்டுள்ள, செங்கோடன் - திருச்செங்கோட்டில் எழுந்தருளியுள்ளவரே! என்கிலை - என்று துதிக்கின்றாயில்லை, குன்றம் எட்டும் - குலமலைகள் எட்டையும், கிழித்து ஓடும் - பிளந்து போகத் தக்க, வேல் என்கிலை - வேலாயுதமே! என்று துதிக்கின்றாயில்லை, முத்திகிட்டுவது எங்ஙன் - இப்படிப்பட்ட உனக்கு மோக்ஷ இன்பம் கிடைப்பது எந்தவிதம்?

## விரிவுரை.

### சுழித்து ஓடும் ஆற்றிற் பெருக்கானது செல்வம்:—

ஆற்றின் வெள்ளம் எவ்வாறு நிலையற்றதோ அதுபோல் செல்வமும் நிலையற்றது.

"அகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும்" —நாலடியார்.

'நீர்க்குமிழிக்கு நிகரென்பர் செல்வம்' —கந்தரலங்காரம்.

அறுசுவை யுண்டி அமர்ந்தில்லா ளூட்ட
மறுசிகை நீக்கி யுண்டாரும்—வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்திற் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று.

ஆதலால், செல்வம் உள்ள போதே அறத்தைச் செய்து அதன் பயனைப் பெற விரைந்து முயற்சி செய்யவேண்டும்.

**துன்ப மின்பங்கழித்து ஒடுகின்றது எக்காலம்:—**

துன்பத்தையும் இன்பத்தையும் ஒன்ருகப் பாவித்து அதனை அறவே நீக்கித் துறந்து செல்வது எக்காலமோ? என்கின்றனர்.

துன்பம் வரும்போதும் இன்பம் வரும்போதும் மனம் கலங்காது ஒரே தன்மையாக இருக்கவேண்டும். ஸ்ரீ ராமர் "அன்று காலை இப்பூ மண்டலத்திற்கு மாப்பெருந் தலைவனுகுதி" என்ற போதும், அன்றிரவு "சடைமுடியுடன் பதினலாண்டு கானகம் செல்லுதி" என்ற போதும் உவகையும் கவலையுமின்றி ஒரே நிலையில் இருந்த திறத்தை, அசோக வனத்தில் சிறையிருந்த தேவி நினைத்து நெஞ்சம் நெகிழ்ந்தாள் எனவரும் திருப்பாடலை ஓர்க.

மெய்த் திருப்பதம் மேவென்ற போதினும்
இத்திருத் துறந் தேகென்ற போதினும்
சித்திரத்தி னலர்ந்த செந் தாமரை
ஒத்திருந்த முகத்தினை உன்னுவாள்.

**காவிரி:—**

காவிரி எல்லா நதிகளிலும் சிறப்புடையது, "கங்கையின் மீறிய காவிரி" என்றதனுலுங் காண்க.

காவேரி ராஜன் என்ற அரசனுடைய புதல்வி ஆனதாலும், இந்திரன் சீகாழியில் வளர்த்த காவை விரியுமாறு செய்ததனுலும், விநாயகர் காகவடிவாகப் போய் அகத்திய முனிவருடைய கமண்டலத்தைக் கவிழ்த்து விரியச் செய்ததனுலும் காவிரி எனப் பெயர் பெற்றது.

**செங்கோடன்:—**

திருச்செங்கோடு என்னுந் தலம் மிகச் சிறந்தது. அருணகிரி நாத சுவாமிகள் ஆரா அன்புடன் வியந்தோதுமாறு பல இடங்களிலுங் காண்க.

**வேலேன்கிலே:—**

வேலாயுதத்தைத் துதிப்பார்க்கு வினையில்லை.

வீரவேல் தாரைவேல் விண்ணேர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
தொளைத்த வேல் உண்டே துணை.

## கருத்துரை.

மனமே! முத்திபெற வேண்டுதியேல், செல்வ நிலையாமையை யுணர்ந்து, இன்ப துன்பமறப் பற்றற்று திருச்செங்கோடனையும் அப்பரமபதியின் கை வேலையுந் துதிப்பாயாக.

ஓம் குஹாய நம:

# சிவானந்தலஹரீ

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

(230-ம் பக்கத் தொடர்ச்சி)

(82) ஜநநம்ருதியுதாநாம் ஸேவயா தே3வதாநாம்
நப4வதி ஸுக2லேச: ஸம்சயோ நாஸ்தி தத்ர!
அஜநிமம்ருதரூபம் ஸாம்ப3மீசம் ப4ஜந்தே
ய4 இஹ பரமஸௌ2க்யம் தேஹி த4ந்யா லப4ந்தே!!

## பதவுரை.

| | | |
|---|---|---|
| ஜநநம்ருதி யுதாநாம் | — | பிறப்பு இறப்புகளோடு கூடினவர்களான |
| தேவதாநாம் | — | மற்றைய தேவர்களுடைய |
| ஸேவயா | — | சேவையினல் |
| ஸுகலேசம் | — | அற்பசுகமும் |
| நபவதி | — | உண்டாகின்றதில்லை |
| தத்ர | — | அவ்விஷயத்தில் |
| சம்சயோ | — | சந்தேகம் |
| நாஸ்தி | — | (அணுவளவும்) கிடையாது |
| யே | — | எவர்கள் |
| அஜநிம் | — | பிறப்பில்லாதவராயும் |
| அம்ருதரூபம் | — | மரணமில்லாத உருவத்தை யுடையவராயும் |
| ஸாம்பம் | — | அம்பிகையுடன் கூடினவராயும் விளங்குகின்ற |
| ஈசம் | — | சிவபெருமானை |
| இஹ | — | இப்பிறப்பில் |
| பஜந்தே | — | சேவை செய்கின்றார்களோ |
| தேஹி | — | அவர்கள் |
| தந்யா: | — | இப்பிறப்பின் பயனைப் பெற்றவர்களாகி |
| பரம ஸௌக்யம் | — | மேலான சுகத்தை (பேரின்பத்தை) |
| லபந்தே | — | அடைகின்றார்கள். |

## பொழிப்புரை.

பிறப்பு இறப்புகளையுடைய தேவர்களின் சேவையால் அற்ப சுகமும் உண்டாகமாட்டாது. இதில் யாதும் ஐயமில்லை. எவர்கள் இந்தப் பிறப்பில் பிறப்பு இறப்பு இல்லாதவராயும் உமையம்மையாரோடு கூடினவராயும் விளங்குகின்ற சிவபெருமானை சேவை செய்கின்றார்களோ அவர்கள் பிறப்பின் பயனையடைந்து முத்தி யின்பத்தையும் பெறுகின்றார்கள்,

உ

ஓம் குஹாய நம:

# கந்தர் திருவிளையாடல்

(23[illegible]-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு பெருமான் "வழியறியேன்; நீ வழி காட்டு" என்னலும், பெருமாட்டியார் பெருமானை சுனையிடம் அழைத்துச் சென்று விடுத்தனள். பெருமான் சுனை நீரைப் பருகி, "பெண்ணமுதே! எனக்குப் பசியும் நீங்கிற்று; தாகமும் நீங்கிற்று; உன் மீது வைத்த மோகம் நீங்கியதில்லை. அதனைத் தணியச் செய்வாய்" என்றனர். உடனே வள்ளியம்மையார் சினந்து, "தவவேடங் கொண்ட உமக்கு இது தகுதியோ? புனங்காக்குமென்னை இரந்து நிற்றல் உமது பெருமைக்கு அழகோ? எமது குலத்தார் இதனையறிந்தால் உமக்குப் பெருங்கேடு விளையும். உமக்கு நரை வந்தும் நல்லுணர்வு சிறிதுமில்லை. பித்தரைப் போல பிதற்றுகின்றீர். இவ்வேடருடைய கூட்டத்திற்கே பெரும் பழியைச் செய்துவிட்டீர்" என்று புனங்காக்கப் புறப்பட்டுச் செல்வாராயினர். தனக்குவமையில்லாத் தலைவர் தந்திமுகத்தெந்தைதனை, "முன்னே வருவாய் முதல்வா" என நினைந்தனர். விநாயகக் கடவுள் வேழவடிவு கொண்டு மலையும் மண்ணும் நடுங்கவந் தருளினர். அம்மை அது கண்டு அஞ்சி ஓடி விருத்த முனிவரைத் தழுவி, "உமதுரைபோல் செய்வேன்; காத்தருள்க" என்றனர். பெருமான் மகிழ்ந்து விநாயகரைப் போமாறு திருவுளஞ் செய்ய அவர் மறைந்தருளினர். கந்தக் கடவுள் தமது ஆறுமுகத் திருவுருவைக் காட்டியருளினர். வள்ளிநாயகி அது கண்டு அச்சமும் ஆநந்தமுங் கொண்டு, அடி பணிந்தும் அழுதும் தொழுதும் துதித்தும் ஆராத காதலுற்றும், 'எம்பெருமானே! முன்னமே இத்திருவுருவங் காட்டாமையால் யான் புரிந்த பிழைகளைப் பொறுத்தருள்வீர்" என்றார். கந்தநாயகன் அம்மையாரை நோக்கி அருள் மழை பொழிந்து. "பெண்மணியே! நீ முற்பிறப்பில் திருமாலுடைய புதல்வி; நம்மை மணக்குமாறு நற்றவஞ் செய்தனை. ஆதலால், நாம் உமக்கு வலிதில் வந்தருள்புரிந்தோம்" என்று திருவாய் மலர்ந்து, வள்ளிபிராட்டியாருக்குப் பிரணவோபதேசம் புரிந்து, தழுவிப் பேரின்பத்தை வழங்கி, "நீ தினைப்புனஞ் செல்; நாளை வருவோம்" என்று மறைந்தருளினர்.

அம்மையார் மீண்டும் பரண்மீது நின்று "ஆலோலம்" என்று ஆயாலோட்டினர். அருகிலுள்ள புனங்காக்கும் பாங்கி பெருமாட்டியாரிடம் வந்து, "அம்மா! தினைப்புனத்தை பறவைகள் பாழ்படுத்த நீ எங்கு சென்றனை?" என்று வினவினள். வள்ளியம்மையார் "நான் மலைமீதுள்ள சுனையில் நீராடச் சென்றேன்" என்றனர். பாங்கி,

மைவிழி சிவப்பவும் வாய் வெளுப்பவும்
மெய்வியர் வடையவும் நகிலம் விம்மவும்
கைவளை நெகிழவும் சாட்டுந் தன்னகுவளை
எவ்விடை யிருந்துள தியம்புவா யென்றாள்.

இவ்வாறு பாங்கி கேட்க, அம்மையார், "நீ என் மீது குறை கூறுதல் தக்கதோ?" என்றனள். பாங்கியும் தலைவியும் கூடியுள்ள ஆங்கு அறுமுகக் கடவுள், முன்போல் வேடவடிவுதாங்கி, வேட்டை யாடுவார்போல் வந்து, "பெண்மணிகளே! இங்கு என் கணைக்குத் தப்பி ஓடிவந்த பெண்யானையைக் கண்டதுண்டோ?" என்று வினவி யருளினர். தோழி, "ஐயா! பெண்களிடத்தில் உமது வீரத்தை விளம்புவது முறையன்று" என்று கூறி, வந்தவர் கண்களும் இருந்தவள் கண்களும் உறவாடுவதைக் கண்டு, "அம்மை யாடிய சூனை இதுதான் போலும்" என்று எண்ணி தனது புனஞ்சென்று இருந்தனள். பெருமாள் பாங்கி இருக்கு மிடஞ்சென்று, "பெண்ணே! நின் தலைவியை எனக்குத் தருவாய்; நினக்கு வேண்டுவனவெல்லாம் தருவன்" என்றருளினர். பாங்கி, "ஐயா! இதனை வேடுவர் கண்டால் பேராபத்தாக முடியும். விரைவில் பெயர்ந்துபோம்" என்றாள். பெருமாள்,

தோட்டின மீதுசெல் விழியினாய் தோகையோ டென்னைக்
கூட்டிடா யெனிற் கிழிதனி லாங்கவள் கோலந்
தீட்டி மாமட லேறிநும் மூர்த்தெரு வதனி
லோட்டு வேனிது நாவளையான் செய்வதென் றுரைத்தான்.

பாங்கி அது கேட்டு அஞ்சி, "ஐயா! நீர் மடலேறவேண்டாம் அதோ தெரிகின்ற மாதவிப் பொதும்பரில் மறைந்திரும். எம் தலைவியைத் தருவன்" என்றாள். மயிலேறுமையன் மாதவிப் பொதும்பரில் மறைந்திருந்தனன். பாங்கி வள்ளி பிராட்டியிடம் போய் வணங்கி அவருடைய காதலை யுரைத்து உடன்பாடுசெய்து அம்மாதவிப் பொதும்பரிடம் அழைத்தேகி, நான் உனக்கு மலர் பறித்துக்கொண்டு வருவேன்" என்று மெல்ல நீங்கினள். பாங்கி நீங்கப் பரமன் வெளிப்பட்டு பாவை வேந்துடன் கூடி, நாளை வருவேன்; நின் இருக்கைசெல்" என நீங்கினன் பாங்கி மலர் பறித்து வந்து சூட்டி தலைவியுடன் புனம் போந்தாள்.

இவ்வாறு சில பகல் கழிந்தன, தினை விளைந்தன. குன்றவாணர்கள் ஒருங்குகூடி விளைவை நோக்கி மகிழ்ந்து, வள்ளியம்மையை நோக்கி, "அம்மா! மிகவும் வருந்தி இதனைக் காத்தனை. இனி உன் சிறு குடிலுக்குச் செல்லுதி" என்றனர். அம்மையார் அது கேட்டு வருந்தி, "அந்தோ! என்னுருயிர்க் காதலருக்குச் சீறூர்க்கு வழி தெரியாதே! இங்கு வந்து தேடுவாரே. ஏ மானினங்காள்! மயிலினங்காள்! குயிலினங்காள்! எங்கள் பெருமானுக்கு யாங்கள் சென்ற செய்தியைச் செப்புதிர்" என்று புலம்பிக் கொண்டே தன் சீறூர்ச் சிறு குடிலுக்குச் சென்றனர். தாயார் மகளை அன்புடன் தழுவி நின்மேனி மாறுபட்டிருப்பது ஏன்?" என்று நல்லுரை கூறி இருத்தினள்.

வள்ளி நாயகியார் வடிவேற் பெருமானது பிரிவுத் துன்பத்தைப் பொறுக்காது அவசமுற்று வீழ்ந்தனர். பாவையர்கள் வந்து எடுத்து அணைத்து, மேனிமெலிந்தும் வளைகழன்றும் உள்ள தன்மைகளை நோக்கி "ஏதோ தெய்வம் பிடித்துளது" என்று கூறினார்கள். நம்பி முதலியோர் உள்ளம் வருந்தி, முருகனை வழிபட்டு வெறியாட்டயர்ந்தனர். வேலன்மேல் முருகவேள் ஆவேசமாகி, "நாம் இவளைத் தினைப்புனத்தில் தீண்டினோம்; நமக்குச் சிறப்புச் செய்தால் நம் அருளால் இது நீங்கும்" என்று குறிப்பிற் கூறியருளினார். அம்மொழி கேட்டலும் வள்ளியம்மையார் அவசம் நீங்கி எழுந்தனர். "அவ்வாறு சிறப்புச் செய்கின்றோம்" என்று செவிலி பிரார்த்தனை செய்தாள்.

முருகவேள் தினைப்புனஞ்சென்று திருவிளையாடல் செய்வார் போல் வள்ளியம்மையாரைத் தேடிக் காணாது நள்ளிரவில் சீறூர் வந்து குடிலுக்குப் புறம்பே நின்றார். அதனை யுணர்ந்த பாங்கி வெளிவந்து பெருமானைப் பணிந்து, "ஐயா! நீர் இப்படி இரவில் இங்கு வருவது தகாது; உம்மைப் பிரிந்த எமது தலைவியும் உய்யாள். இங்கு நீர் இருவருங்கூட இடமில்லை. ஆதலால், அவளைக் கொண்டு நும் ஊர்க்குச் செல்லும்" என்று கூறி, தாய் துயிலறிந்து, தமர் துயிலறிந்து, நாய் துயிலறிந்து, நகர் துயிலறிந்து, பேய் துயிலறிந்து கதவைத்திறந்து பாங்கி வள்ளி பிராட்டியாரை கந்த வேளிடம் ஒப்புவித்தாள். வள்ளி நாயகியார் பெருமானைப் பணிந்து, "வேதங்கள் காணாத இந்த உமது விரை மலர்த்தாள் நோவ என் பொருட்டு இவ்வேடச் சேரிக்கு நடந்து இவ்விரவில் எழுந்தருளினீரே" என்று தொழுது நின்றார். பாங்கி பரமனை நோக்கி, "ஐயா! இங்கு நெடிது நேரம் நின்றால் வேடர்காண நேரும்; நேரிற் பெருந் தீமையாய் முடியும்; இம்மாதரசியை அழைத்துக்கொண்டு நும்பதிபோய் இவளைக் காத்தருள்வீர்" என்று அம்மையை அடைக்கலமாகத் தந்தனள். எம்பிரான் பாங்கிக்குத் தண்ணருள் புரிந்தனர். பாங்கி வள்ளி நாயகியைத் தொழுது அணைத்து, "நின் கணவனுடன் சென்று இன்புற்று வாழுதி" என்று கூறி அவ்விருவரையும் வழிவிடுத்துக் குகைக்குள் சென்று படுத்தாள். குமாரக் கடவுள் வள்ளி நாயகியாருடன் சீறூரைத் தாண்டிச் சென்று ஓர் இளம்பூங்காவில் தங்கினார்.

விடியற்காலம் நம்பிராஜனுடைய மனைவி எழுந்து தனது மகளைக் காணாது வருந்தி எங்கணுந் தேடிக் காணாளாகிப் பாங்கியை வினாவினாள். அவள் "நானறியேன்" என்றாள். தாய் கணவனிடம் நிகழ்ந்ததைக் கூற நம்பி கேட்டு வெகுண்டு, "எமது காவலைக் கடந்து எங்குலவிளக்கைக் கொண்டு போனவன் யார்?" என்று, போர்க்கோலங் கொண்டு, தமது பரிசனங்களுடன் எங்குந் தேடித் திரிந்தான். வேடர் பலர் புலிகள் மான் குட்டியைத் தேடுவது போல தேடுவதை யறிந்த வள்ளி பிராட்டியார் பெருமானைப் பணிந்து "எம்பெருமானே! ஈட்டி, பிண்டி, பாலம், வில், வாள் முதலிய ஆயுதங்களுடன் வேடர் பலர் தேடி இங்கு எய்தினர், இனி என் செய்வது? என் உள்ளம் சுழல்கின்றது" என்றார். கந்தவேள், "பெண்ணரசே! வருந்தாதே; சூராதியசுரரை மாய்த்த வேற்படை நம்மிடமிருக்கின்றது; வேடர் வெகுண்டு

போர் புரியின் அவர்களைக் கணப்பொழுதில் மாய்ப்போம். நீ அதனைக் காண்பாய். எனக்குப் பின் இருந்தி'' என்று அருளிச் செய்தார். அம்மையார் அவ்வண்ண மிருந்தனர். வேடர்கள் அங்கு வந்து வெகுண்டனர். நம்பி நம் குலக்கொடியைக் கவர்ந்த கள்வன் நம்மைக் கண்டு ஓடவுமில்லை. அஞ்சவுமில்லை; அடியுங்கள்; பிடியுங்கள்'' என்று வேடருடன் பாண மழை பொழிந்தான் வள்ளி நாயகியார் அது கண்டு அஞ்சி, ''எம்பெருமானே! வேலையேவி இவரை மாய்த்தருள்வீர்'' என்று வேண்டினுள், பெருமான் அது கேட்டு திருவுளஞ் செய்ய, சேவற் கொடி வந்து கூவியது. அக்குரலால் நம்பி முதலிய வேடரனைவரும் மாய்ந்து பட்டனர். தந்தையும் உடன் பிறந்தாரும் தமரும் மாண்டதைக்கண்ட வள்ளி பிராட்டியார் கண்டு பதைபதைத்து வருந்தினுர். ஐயன் அம்மையின் அன்பைக் காணும் பொருட்டு சோலையை விட்டு நீங்க அம்மையாரும் ஐயனைத் தொடர்ந்து சென்றுர்.

இடையில் நாரதர் எதிர்ப் பட்டார். எதிர்ப்பட்ட நாரதர் இறைவனை மெய்யன்போடு பணிந்து ''நிகழ்ந்தது யாது?'' என்று வினுவினுர். பெருமான் வள்ளி நாயகியாரைக் கண்டது முதல் வேடரை மாய்த்தது வரை முழுவதும் மொழிந்தருளினுர். நாரதர் ''கந்த நாயகரே! பெற்ற பிதாவையும் பிற சுற்றத்தாரையும் வதைத்து எம்பிராட்டியைக் கொண்டேகுதல் தகுதியாமோ? அது அம்மைக்கும் வருத்தத்தைத் தருமே'' என்றுர். எம்பிரான் மீண்டும் அப்பூங்காவிற்கு வந்து, ''வள்ளி நாயகி! நின் கிளைஞரை எழுப்புதி'' என்று பணித்தருளினுர். பிராட்டியார் ''அனைவரும் எழுக'' என்று அருள் பாலித்தனர். நம்பி தன் சேனைகளுடன் எழுந்தான். குகப்பெருமான் ஆறு திருமுகமும் பன்னிரு திருக்கரமுங் கொண்டு காட்சியளித்தனர். நம்பி ராஜன் வேடருடன் அறுமுக வள்ளல் அடிமலரில் வீழ்ந்து பணிந்து எழுந்து உச்சி கூப்பிய கையனுய், ஆனந்தக் கண்ணீர் பொழிந்து, ''தேவதேவ! நீரே இவ்வாறு எமது குலக் கொடியை கரவுசெய்து எமக்குத் தீராப் பழியை நல்கின் யாம் என் செய்வோம்? அன்னையே மகவுக்கு விடமூட்டின் மறுப்பார் யாவர்? எம்குல தெய்வமே! தேவரீர் சீறூருக்கு வந்து அக்கினி சான்ருக எம்புதல்வியை மணந்து கொண்டு செல்லுவீர்'' என்று வேண்டி நின்றுன். கந்தவேள் அவன் முறைக் கிரங்கி, வள்ளி நாயகியுடனும் நாரதருடனும் சீறூருக்கு வந்தருளினுர். நம்பி தன் சீறூரில் தனது சிறு குடிலில் புலித்தோல்மீது எம்பிரானை பிராட்டியுடன் எழுந்தருளச் செய்தான். வேடர், குறவர், மறவர் முதலியோர் ''எமது குலதெய்வமே எம்புதல்வியை மணக்க வந்துவிட்டது'' என்று உள்ளம் உவந்து புகழ்ந்து போற்றி நின்றுர்கள்.

கந்தக் கடவுள் தமதருகில் எழுந்தருளியுள்ள தேவியைத் திருவருள் நோக்கம் புரிந்தருள, வள்ளி நாயகியார் மானுட வடிவம் நீங்கிப் பண்டை வடிவு பெற்று விளங்கினுர். அதனைக் கண்ட நம்பி முதலியோர் ''இப்பிராட்டி எம்மிடம் தோன்றி வளர்ந்தது எமது மாதவமே'' என்று இறும்பூதுற்றனர். பிறகு நம்பி வள்ளி பிராட்டியின் திருக்கரத்தை மயிலேறும் வள்ளல் திருக்கரத்தில்

வைத்து, "எமது தவப் புதல்வியை ஏற்றுக்கொண்டு அருள்புரிவீர்" என்று தண்ணீர்த் தாரை விட்டான். நம்பெருமான் திருவருட் குறிப்பால் நாரதர் வேள்வித் தீ வளர்த்து ஏனைய விதிமுறைச் சடங்குகளைச் செய்தனர். அச்சமயத்தில் ஆலமுண்ட நீலகண்டப் பெருமான் பிரமன் திருமால் தேவர் கோமான் முதலிய தேவ கணங்கள் சூழ உமாதேவியுடன் வந்தருளி விண்ணில் நின்று வள்ளியம்மையை மணந்துகொண்ட வைபவத்தைக் கண்டருளினர். திருமாலாதி தேவர்கள் பூமழை பொழிந்து முருகவேளைப் போற்றித் துதி செய்தார்கள். குமரவேள் அது கண்டு நம்பி யுணராவண்ணம் சிவபெருமானைப் பணிந்து, ஏனைய தேவர்கட்குத் திருவருள் புரிந்தார். சிவபெருமான் தேவர் குழாத்துடன் மறைந்தருளினர்.

நம்பி தனிப்பெருந் தலைவராகிய கந்தப் பெருமான் தனக்கு மருகராகும் பெறுதற்கரிய பேறு பெற்றதற்குப் பெரிதும் மகிழ்ந்து, தேனுந் தினைமாவும் பழங்களும் படைத்து. "நீரும் தேவியும் உண்டருள்வீர்" என்று வேண்ட, பெருமான் அருள் புரிந்து, "இனி யாம் இவளுடன் திருத்தணியிற் சென்று இருப்போம்" என்று கூறினர். வேடன் 'அங்ஙனமே' என்று பணிந்தான். தாயும் பாங்கியும் செவிலியும் பிராட்டியைத் தழுவி நல்லாசிகள் பல கூறி அன்பு கண்ணீர் சொரிந்து நின்றனர். பெருமான் பிராட்டியுடன் "நம்பி! நீ தேவருந்தொழ அரசுபுரிந்து பிறகு நம் பக்கல் வரக்கடவாய்" என்று அருள் செய்து, அம்மையுடன் தணிகைமாமலைக்கு வந்து சேர்ந்து முன்னரே அங்கு தேவதச்சனால் செய்துள்ள திருக்கோயிலில், உலகெலா முய்யுமாறு வள்ளியம்மையாருடன் வீற்றிருந்தருளினர். (தொடரும்)

---

வள்ளியம்மையார் திருமண தத்துவம்.—வள்ளியம்மையார் - ஜீவான்மா; முருகப் பெருமான் - பரமான்மா; ஐம்புலன்களும் வேடர்கள். தினைப்புனம் - ஞானப் பயிர். நாரதர் - தவவலிமை. பெருமாள் மரமானது, ஒருவன் ஒருத்திமீது மோகமுற்றால் மரம் போலாவன் என்பதன் குறிப்பு; கிழவனானது, பெண்ணாசை கொண்டோன் விரைவில் கிழவனாவான் என்பது. பாங்கி-பக்தி; ஜீவனும் சிவனும் ஐக்கியப்படுதல் வள்ளி திருமணம்.

---

## எதுகைப் பழமொழிகள்.

உயர்திரு அடுக்குமொழி ஆவுடையப்ப செட்டியார், காருகுறிச்சி.

1. அருந்ததியனையாள் அமைபவள் மனையாள்.
2. அல்லல் பிறவி யறுப்பவன் துறவி.
3. ஆயுள் கெடுமுன் அறமே புரிமின்.
4. ஆந்தை சிறிது கீச்சுப் பெரிது.
5. இகழ்ச்சி யுடையான் புகழ்ச்சி யடையான்.
6. இருவினை யாட்டும் ஈயது காட்டும்.

ஓம் குஹாய நம:

# கற்பு.

## கற்புடை மகளிர் கனவிலும் பொய் மொழியார்.

'இந்திர பவனம்' என்ற நகரில் 'சந்திரசேகரன்' என்ற மன்னன் மநுநெறி வழுவாது அரசுபுரிந்து வந்தான். அம்மன்னனுக்கு 'அழகம்மை' என்று ஒரு மனைவி இருந்தனள். அவள் அமைதியின் இருப்பிடம்; கற்புக் களஞ்சியம்; குணக்குன்றம்; அன்பின் ஆழி. பதியை முப்போதும் வணங்கி, இன்சொல் வழங்கி, என்றும் மலர்ந்த முகத்துடன் வானிலிருந்து வந்த மலர் மடந்தை போல் விளங்கிக் கொண்டிருந்தாள். மன்னன் "இக் கற்புக் கரசியை மனைவியாகப்பெற்ற நம் பாக்கியமே பாக்கியம்" என்று உள்ளம் மகிழ்ந்தான். அவர்களுக்குள் மனவருத்தம் உண்டானதே இல்லை. கணவனும் மனைவியும் என்றால் அவர்களைப் போல் எங்குங்காண முடியாதென அந்நகர மாந்தர் அனைவரும் பேசிக் கொண்டார்கள்.

ஒரு நாள் மன்னன் தனக்குள், "இந்த நகரத்தில் கற்புடைய பெண்களைக் கண்டுபிடிக்க வேண்டும். அதற்கு என்ன உபாயம்" என்று யோசித்தான். ஒன்றும் புலப்படவில்லை. மந்திரியைக் கூப்பிட்டு மந்திரி 'இந்த நகரில் கற்புடைய மாதர் யார்?" என்பதைக் கண்டுபிடிக்கவேண்டும். அதற்கு வழியாது" என்று வினவினான். மந்திரி, "நாளை காலை அதற்கு வழி சொல்லுவேன்" என்று போனான். மறுநாட்காலை மந்திரியின் அநுமதிப்படி நகரிலுள்ள பெண்கள் அத்தனை பேரும சித்திர மண்டபத்திற்கு வர வேண்டுமெனப் பறை யறையப்பட்டது. சித்திர மண்டபத்தில் ஊரிலுள்ள பெண்மக்கள் அத்தனை பேரும் குழுமினார்கள். மந்திரி மனைவி சேனாபதி மனைவி முதலியோரும் அங்கு வரவழைக்கப்பட்டார்கள். ஒரு தனி இடத்தில் அரசன் மாதேவியும் இருந்தனள். மந்திரி எல்லோருக்கும் தெரியும்படி ஒரு பெரிய மாடத்தில் நல்ல பரும் எலுமிச்சம் பழத்தை வைத்து, "ஏ! பெண்மணிகளே! இதோ இந்த மாடத்தில் எலுமிச்சம் பழத்தை வைத்துளேன். இது ஒரு முனிவர் கொடுததது. பெரிய மகத்துவமுடையது. இந்தப் பழம் கற்புடையவர் கண்ணுக்குத் தெரியாது. கற்பில்லாதவர் கண்ணுக்குத் தெரியும்" என்று எல்லாப் பெண்கள் காதிலும் கேட்குமாறு கூறினான். அரசனுக்கு மந்திரி செய்யும் அக் காரியத்தின் சூழ்ச்சி ஒன்றும் புலப்படவில்லை. மந்திரியின் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்றான். மந்திரி பிறகு ஒவ்வொரு பெண்ணை அந்த மாடத்திற்கு அருகில் வரச்செய்தான்.

அம்மா! இந்தப் பழம் ஒரு முனிவர் தந்த வரப்பிரசாதம். கற்புடையோர் கண்ணுக்குத் தெரியாது. தங்கட்குத் தெரிகின்

றதா ?'' என்று மந்திரி கேட்டான். அவள் 'தெரியவில்லை'' என்றாள். மந்திரி ''அரசே! இந்த அம்மை கற்புடையவள்' என்று சொல்லி வேறு ஒரு காவலுள்ள தனி இடத்தில் அனுப்பினன். பிறகு ஒவ்வொரு பெண்ணையும் அப்படியே சொல்லிக் கேட்டான் எல்லோரும் எலுமிச்சமபழம் தெரியவில்லை யென்றே சொன்னார்கள். முடிவில் மந்திரி தன் மனைவியிடமும் அதே மாதிரி சொன்னான். அவளும் தெரியவில்லை யென்றாள். மந்திரி 'அரசர் பெருமானே! என் மனைவியும் சிறந்த பதிவிரதைதான்'' என்று அவளையும் அந்த இடத்திற்கு அனுப்பினான். முடிவில் மன்னனுடைய மனைவி அழகம்மை வந்தாள். மந்திரி அம்மாதரசியைத் தொழுது '' அம்மா! இந்த மாடத்தில் ஒரு எலுமிச்சம்பழம் வைத்துளது. இது முனிவரால் தரப்பட்டது. கற்பில்லாதவர் கண்ணுக்குத் தெரியும். கற்புடையார் கண்ணுக்குத் தெரியாது. தங்கட்குத் தெரிகின்றதா ?'' என்று கேட்டான்.

மன்னன் மனைவியாகிய அழகம்மை தனக்குள் ''என்ன இது விபரீதம். நாம் கனவிலும் கற்பு தவறியதில்லையே? கணவனைத் தவிர வேறு கடவுளையும் கை தொழுததில்லையே? அவ்வாறு தொழ நேரினும் கணவன் சொற்படி கணவனுடைய நலத்தைக் கருதியே தொழுதேன். உள்ளம் உரை உடல் என்ற மூன்று கரணங்களாலும் தூய்மையாக இருக்கும் எனக்கு இப்பழம் நன்றாகத் தெரிகின்றதே தெரிகின்ற ஒன்றை இல்லை என்பது எத்துணைப் பெரிய பாவம்?

''கண்டொன்று சொல்லேல்''

''நெஞ்சாரப் பொய்தன்னை சொல்லவேண்டாம்''

என்று படித்திருக்கின்றோமே? படித்தது எதன் பொருட்டு? நடையில் இருக்க வேண்டாமா? ஆதலால் உண்மையையே சொல்லவேண்டும்'' என்று எண்ணினாள். ''மந்திரி! இந்த மாடத்தில் உள்ள எலுமிச்சம்பழம் என் கண்களுக்கு நன்றாகத் தெரிகின்றது'' என்றாள். அதைக் கேட்ட மன்னன் முகம் வாடிவிட்டது. ''அந்தோ? ஊரில் உள்ள அத்தனை பேரும பதிவிரதைகளாக இருக்க நம் மனைவி மட்டுமா கற்பில்லாதவளாக இருக்க வேண்டும்? இவ்வளவு பேருக்குந் தெரியாதபழம் இவள் கண்ணுக்கு மட்டுந் தெரிந்ததே என் செய்வது? நம் தலைவிதி இப்படி நமக்கு அமைந்தது'' என்று மனங் கவன்று தலையைத் தொங்கவிட்டான்.

பின்னர் மந்திரி அழகம்மையைப் பணிந்து அம்மா நீங்கள் போகலாம்'' என்றான். அழகம்மை இருக்கை சேர்ந்தனள். மந்திரி ''அரசே! நம் நகரில் நம்மகாராணி ஒருவர்தான் கற்பின் செல்வி; மற்றவர்கள் எல்லாம் சற்று முன்பின்தான்' என்றான். மன்னன் ''மந்திரி! நீ ஏன் இப்படி எனக்காக உண்மையை மறைத்து மெழுகிப் பேசுகின்றாய். ''ராணி கற்புடையவளாக இருந்தால் பழந் தெரியாமலல்லவா இருக்கவேண்டும்; பழம் தெரிந்தபின் அவளை எப்படி கற்புடையவள் என்று சொல்லலாம்?'' என்றான். மந்திரி ''மன்னரே! இன்னுமா இதன் உண்மை உமக்கு விளங்கவில்லை?

பட்டப் பகலில் மாடத்தில் உள்ள எலுமிச்சம்பழம் யாருக்குத் தான் தெரியாமலிருக்கும்! தெரிகின்ற ஒன்றை இத்தனை பேரும் தெரியவில்லை தெரியவில்லை என்று வடிகட்டிய பொய்யைச் சொன்னார்கள். என் தாய் மகாராணியார் ஒருவர்தான் சத்தியத்தை ஒளிக்காமல் உரைத்தார். கண்ணிற் கண்டதை இல்லை யென்போர் வேறு என்னதான் செய்யமாட்டார்கள்? ஆதலால் ராணியம்மையார் ஒருவர்தான் கற்புடையவர் என்று திட்டமாகத் தெரிகின்றது' என்றான். மனனன், "மந்திரி! நீ எனக்காகச் சொல்கின்றனையா? அல்லது உண்மைதானா?" என்றான்.

மந்திரி திரும்பவும் காவல் செய்யப்பட்டுத் தனியிடத்திலிருந்த ஒருத்தியை வரவழைத்தான், 'எலுமிச்சம் பழம் தெரிகின்றதா?' என்றான். அவள் இல்லை என்றாள். மந்திரி நீண்ட சவுக்கெடுத்து நீட்டினான், சாட்டையைக் கண்ட அவள் நடுநடுங்கி "எலுமிச்சம் பழம் தெரிகின்றது; தெரிகின்றது' என்று கத்தினாள். பிறகு ஒருவர் பின் ஒருவராக அவ்வளவு பேரும் இதே பாடம் படித்தார்கள். மந்திரி மனைவியும் வந்தாள். சாட்டையின் நீட்டத்தைக் கண்டாள் 'தெரிகிறது; தெரிகிறது' என்று கதறினாள்.

மந்திரி "அரசர் பெருமானே! உண்மையை கண்டீரோ? என் தாய் அழகம்மை ஒருவரே மாசில்லா கற்புடையவர்" என்றான். மன்னன் மனம் மகிழ்ந்து, தன் மனைவியின் குற்றமற்ற கற்புக்குணத்தை எண்ணி வியந்தான். இருவரும் உள்ளம் ஒருமித்து நீடு வாழ்ந்தார்கள்.

---

உ

ஓம் குஹாய நம:

# முருகரும் தமிழும்

## பகழிக்கூத்தருக்குப் பதக்கம் அளித்த லீலை.

ராவ் பஹதூர் வ. சு. செங்கல்வராய பிள்ளை M.A. அவர்கள்.

'முருகரும் தமிழும்' என்னுந் தலைப்பின் கீழ் திருப்புகழமிர்தத்தில் எழுதி வெளியிட்ட வரலாறுகளில் பகழிக்கூத்தரைப் பற்றிச் சுருக்கமாகப் "பகழிக்கூத்தர் என்னும் வைணவர் முருகன் அருள் பெற்று வயிற்று நோய் நீங்கத் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் பாடினார்" எனக் கூறினோம். அவ் வரலாற்றைப் **"பகழிக்கூத்தருக்குப் பதக்கம் அளித்த லீலை"** என விவரித்துக் கூறலாம். தமது வயிற்று

நோயைத் தீர்த்த திருவருளை வியந்து பகழிக்கூத்தர் திருச்செந்தூர் முருக பிரானது சந்நிதியில் இப்பிள்ளைத்தமிழை அரங்கேற்றினார். தமிழின் சந்த நயத்தையும், பொருட்சிறப்பையும் சபையார் கண்டுங் கேட்டும் வியந்தனரே ஒழிய "வைணவராகிய இவருக்கு வேறு மரியாதை செய்ய வேண்டிய அவசியம் இல்லை" எனத்தீர்மானித்து யாதொரு மரியாதையும் செய்யாது விட்டனர். பகழிக்கூத்தரும் எவ்வகைய சிறப்புக்களையும் நாட இல்லை. அறுமுகன் சந்நிதியில் நமது நூல் அரங்கேற்றப் பட்டதே அதுவே போதும் என அகமகிழ்ந்திருந்தனர். ஆனால், தமிழ்ச்சுவை பருகும் முருகப் பெருமானுக்கு அப்படி வாளா இருக்க முடியவில்லை. அன்றிரவே தமக்கணிந்திருந்த விலையுயர்ந்த அரதனப் பதக்கத்தை நித்திரை செய்துகொண்டிருந்த பகழிக்கூத்தரது கழுத்திற் புனைவித்து மறைந்தருளினார். பொழுது விடிந்ததும், "இதேது! இப் பதக்கம் என் கழுத்தில் வந்தவாறு எங்ஙனம்?" எனத் திகைத்தனர் புலவர். அச்சமயத்திற் சுவாமியின் மீதிருந்த பதக்கம் காணோமே எனத்தேடி அலைந்த கோயில் அதிகாரிகள் முதலிய பெரியோர்கள் அப்பதக்கம் புலவர் கழுத்தில் அணியப்பட்டிருப்பதை அறிந்து, "ஆஹா! என்னே முருகன் திருக்கூத்து. இப்பெரியாருக்கு யாம் செய்த குறையைத் தாமே நீக்கிவிட்டார் தமிழ்க் கடவுள், தமிழ் மீது தமக்கிருந்த காதலால்" என உணர்ந்து, பகழிக்கூத்தரை வணங்கி, "ஐயா! எங்கள் அபராதத்தைப் பொறுத்தருளல் வேண்டும்" என வேண்டி, அவரையும் அப்பிள்ளைத்தமிழையும் பல்லக்கில் ஏற்றி ஊர்வலஞ் செய்வித்துப் புலவருக்கு வேண்டிய மரியாதைகளைச் செய்து சிறப்பித்தனராம். அதுமுதல் இத் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் தெய்வத் தன்மை வாய்ந்ததென்று முருகன் சன்னிதானத்தில் திருப்புகழ் பாடின பின்பு ஓதப்பட்டு வருகின்றது.

வள்ளி நாயகியாரை மணந்து, அவருக்கு அருள் செய்யும் பொருட்டு, முருகக் கடவுள் மானிட வடிவங்கொண்டு, சுனையிலும், அருவித் துறையிலும், தினைப் புனத்திலும், பரணிலும், தேடித் திரிந்த வரலாற்றைக் கூறுகின்றன. இந்த வரலாறு கந்த புராணத்திற் கூறப்பட்டிருக்கிறது. வினையென்பது இங்கே உலக வாழ்வைப் பெரிதாக மதிக்கச் செய்யும் நல்வினை தீவினையாகிய இருவினை மலக்கட்டைக் குறிக்கிறது; இந்த இருவினை மலக்கட்டு நீங்கும் வரையும். யான் எனது என்னும், உலகப் பற்றுக்கள் நீங்கா; ஞான சக்தியாகிய வேலின் ஒளி உள்ளத்தில் விளங்கும் பொழுதே, வினை மல இருள் நீங்குதலும் உடன் நிகழ்தலால், 'வினையோட' என்றார். வேலைத் தியானிக்கிறவர் உள்ளத்திலே முருகன் எப்பொழுதும் மல இருளை நீக்கி ஞான ஒளியை விளங்கச் செய்தலால், 'வினையோட விடுங்கதிர்வேல்' என்று கூறினார். கதிர்-கிரணம்; இது இங்கே ஆகு பெயராய் ஒளியைக் குறிக்கிறது ஞான சக்தியாகிய வேற்படை பேரொளியாயிருத்தலால் 'கதிர்வேல்' என்றார். "வையத் திருந்துறையுள்வேன் மடுத்தென் சிந்தனைக்கே கோத்தான், பெருந்துறையின் மேயபிரான்;" என்று மாணிக்க வாசக அடிகள் திருவாசகம் 'அணைந்தோர் தன்மை' மூன்றாவது பாட்டில், சிவபெருமான் தனது திரிசூல வேலைத் தமது சிந்தையிற் செலுத்தியதைக் கூறியிருத்தல் காண்க. மறவேன் என்பது மறக்க மாட்டேன்; அதாவது நினைப்பு மறப்புமின்றி எப்பொழுதும் தியானித்துக் கொண்டிருப்பேன். வினையோடுதலாகிய காரியத்துக்கு, கதிர்வேலை மறவாதிருத்தல் காரணமாகக் கூறப்பட்டது; வினையோட என்பது எதிர்காலப் பொருளில் வந்த செய என்னும் வாய்பாட்டு நிகழ்கால வினையெச்சம். குளம் நிறைய மழை பெய்தது என்றாற்போல; ஞானசக்தியாகிய பேரொளி வேலை உள்ளத்தில் நினைதலால், அவ்வுள்ளத்தில் வினைமல இருள் முற்றிலும் நீங்கி ஒளி விளங்குகின்றது. 'நினைப்பும் மறப்பும் இலாதவர் நெஞ்சம்; 'வினைப்பற்றறுக்கும்' விமலனிருக்கும்" என்று தி. ம. 2970 வது பாட்டிலும்,

"அன்றிய பாச இருளும் அஞ்ஞானமும்,
சென்றிடும் ஞானச் சிவபிர காசத்தால்"

என்று தி. ம. 2001 வது பாட்டிலும், திருமூலர் கூறியிருத்தல் காண்க. வேலானது பேரொளியோடு விளங்குகிறதென்பதை, ஆசிரியர் வேல் வகுப்பில், "சுடர்ப் பரிதியொளிப்ப நில வொழிக்குமதி, ஒளிப்ப அலை அடக்குதழல், ஒளிப்ப ஒளிர், ஒளிப்பிரபை வீசும்......குகன்வேலே" என்று கூறியருளினார். உள்ளத்திலுள்ள மல இருள் நீங்கி ஒளி விளங்குதற்காகவே வேலின் வழிபாடும்; வேல்,வேல் என்று கூறித் துதித்தலும், முருகனது வழி பாடாக நமது நாட்டில் இன்றும் நடைபெற்று வருகின்றன. 'மனையோடு' என்பதில் 'மனை' என்பது மனைவி; அதாவது மனைவியோடு கூடிய இல் வாழ்க்கையினால்; ஓடு மூன்றும் வேற்றுமை பொருளில் வந்தது தியங்குதல் உள்ளத்தில் சஞ்சலப் படுதல்; இல் வாழ்க்கையிலுள்ள ஒருவர் இரு வினைப்பயன்களாகிய, செல்வம், வறுமை, புகழ்ச்சி, இகழ்ச்சி, நன்மை, தீமை முதலிய துவந்துவங்களில் அங்குமிங்கும் ஊசல் போல உழன்று, உள்ளம் சஞ்சலப் படுதலால், மனையோடு தியங்கி என்றார். அங்ஙனம் சஞ்சலப்படுதலால், மெய்ப் பொருளாகிய முருகனை மறந்து, பொய்ப் பொருளாகிய உலக வாழ்வில், மயங்குதலுண்டாவதால், தியங்கி மயங்கிடவோ என்றார்; மயங்கிடவோ என்பதிலுள்ள ஓ. வினா, மயங்கிடுதற்கு அன்று என்னும் எதிர் மறைப் பொருளை உணர்த்துகின்றது. மயங்கிடுதல் என்பதிலுள்ள 'இடு' பகுதிப் பொருள் விகுதி மயங்குதல் என்னும் பயனிலையானது, மறவேன் என்ற வினையிலடங்கி யிருக்கின்ற, மறவாதிருத்தல் என்ற பெயர்ப் பொருளை எழுவாயாகக் கொண்டது. கதிர்வேலை மறவாதிருத்தல் இல்வாழ்க்கையில் தியங்கி மயங்குதற்காக அல்லாமல் அம்மயக்கத்திலிருந்து நீங்கி, முருகனது திருவடி அநுபூதியை யடைதற் பொருட்டாகுமென்பது கருத்து. வேல் என்ற சொல், வெல் என்ற பகுதி யடியாகப் பிறந்து, அப்பகுதி முதலெழுத்து நீண்டு வந்தது. இது முதனிலை நீண்ட

தொழிற் பெயராய், ஆன்மாக்களுடைய மலத்தை வெல்லும் ஆற்றலை யுடையதென்ற பொருளில் வந்தது. 'சுனையோடு' துறையோடு, தினையோடு, இதணோடு என்பவற்றிலுள்ள, ஓடு உருபுகள் நான்கும் வேற்றுமை யுருபு மயக்கம், ஏழாம் வேற்றுமைப் பொருளில் வந்தன.

இருவினைகளும், ஆணவ மலங் காரணமாக, மாயா காரியங்களிற் றொழிற்படுதலால், அடியாரொருவர், தாம் முருகனது வேலை நினைந்து வழிபட்டு இருவினைத் தொடக்கை, நீக்கவும், இருவகை உலகப் பற்றுக்களினின்றும் நீங்கி முருகனுடைய திருவடி வியாபகத்துளடங்கி, அவனுடைய திருவடி யனுபூதியை யடைவர் என்பது இப்பாட்டின் கருத்து.

"அவனே தானே ஆகிய அந்நெறி,
ஏகனாகி இறைபணி நிற்க,
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே."

என்ற சிவஞான போதம் 10-வது, சூத்திரக் கருத்து மிதுவே.

(41) சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னொபதே சிகனே.

(ப—ரை.)

வாகா - வெற்றியை யுடையவனே;
முருகா - முருகக் கடவுளே;
மயில்வாகனனே - மயிலை ஊர்தியாக வுடையவனே;
யோகா - உயிர்ப்பொருளிலும் உயிரில் பொருளிலும் அத்துவிதமாய்க் கலந்து எங்கும் நிறைந்திருக்கும் பொருளே;
சிவஞானோபதேசிகனே - பக்குவப்பட்ட அடியார்களுக்கு மெய் யுறிவை

அறிவுறுத்தும் அருட்குரவனே;

நமனூர் - நமன் தூதுவர்;

கலசஞ் செயுநாள் - எனது பருவுடலிலிருந்து உயிரைப் பிரிக்கப் பாசக் கயிர் வீசிச் சண்டை செய்யும் நாளிலே;

சாகாது - நான் சாகாதபடி;

எனை - (அடியேனாகிய) என்னை;

சரணங்களிலே - நினது திருவடி நீழலிலே (தங்கும்படி செய்து)

காகா - விரைவிலே காத்தருள் வாயாக;

(வி—ரை.)

வாகா - தமிழரசர்கள் போரிலடையும் வெற்றிக்கு அடையாளமாக வாகை மலரைச் சூடும் வழக்கம் பற்றி வாகை என்ற சொல் வெற்றி என்னும் பொருளில் வந்தது. வாகையோடு, ஆண்பாற் படர்க்கை விகுதி 'அன்' சேரும் பொழுது 'ஐ' கெட்டு வாகன் என்றாகிய சொல், விளிப்பெய ராகும் பொழுது வாகா என்றாயிற்று. உயிர்களுடைய மல விருளை நீக்கி, அருளொளி விளங்கச் செய்து, அவைகளுக் குத் தனது திருவடி யனுபூதியைக் கொடுத்தலில், எப்பொழு தும் முருகன் வெற்றியை யுடையவனாதலின், வாகா என்று விளித்தார். ஏனைய விளிப்பெயர்களுக்கும் இக்குறிப்பைக் கொள்க. அங்ஙனம் விளித்ததினாலே 1, 2 வரிகளில் ஆசிரி யர் கூறுகிறபடி, தம்மைச் சாகாது காத்தற்கு முருகன் ஆற்றலுடையவன் என்பதை குறிப்பிட்டார். யோகம் - புணர்ச்சி, கலப்பு. அது இங்கே முருகன் எல்லாப்பொருள் களிலும் நிறைந்து அத்துவிதமாய்க் கலந்திருக்கிறானென் னும் பொருளை உணர்த்துகிறது. "ஒழிவற நிறைந்த யோகமே" என்று இந்தப் பொருளில் மாணிக்கவாசக அடி கள் கூறியிருத்தல் காண்க. (திருவாசகம், பிடித்த பத்து க-வது பாட்டு). யோகமே என்ற சொல் 'ஆ' விளியுருபு ஏற்கும் பொழுது, ஈற்றிலுள்ள அம் கெட்டு யோகா என்றா கியது. சிவஞானோபதேசிகனே என்பதில் சிவஞானம் என்ற சொற்றொடரோடு உபதேசிகன் சேர்ந்து சிவஞா

ஞோபதேசிகன் என்பதில் 'னகர' மெய்யிலுள்ள ஓகாரம் குறுகியது. சிவஞானம் என்பது சிவனை அடையச் செய்யும் மெய்ஞ்ஞானம். அது பதிஞானம், மெய்யறிவு, மெய்யுணர்வு முதலிய பேர்களாலும் கூறப்படும். நமனுர் என்ற பன்மைப் பெயர் நமன் தூதுவரைக் குறிக்கிறது. கலகம் செய்தலானது உயிரைப் பருவுடலிலிருந்து பிரித்தற்கு பாசக்கயிர் வீசி இழுத்தல். நமனுரால் வரும் சாவு நீங்கினலன்றி, பிறப்பு நீங்கி, முருகன் திருவடி யனுபூதி யடைதல் தமக்கு முடியாததாதலின், ஆசிரியர் சாகாதெனையே சரணங்களிலே காகா என்று கூறினர். "என்னெஞ்சத்துள்ளே நின்று காத்தானுங் காலனடையாவண்ணம், காணுங்கருகாவூர் எந்தை தானே" (திருக்கருகாவூர்த் திருத்தாண்டகம் 3 வது பாட்டு) என்றும், "சாவாமே காத்தென்னை யாண்டாய் போற்றி" (திருவாரூர் போற்றித் திருத்தாண்டகம் 9 வது பாட்டு) என்றும்,

இறையென் சொல்மற வேல்நமன் தூதுவீர்
பிறையும் பாம்பு முடைப்பெரு மான்தமர்
நறவம் நாறிய நல்நறுஞ் சாந்திலும்
நிறைய நீறணி வாரெதிர் செல்லலே.

(காலபாசத் திருக்குறுந் தொகை 5 வது பாட்டு) என்றும் திருநாவுக் கரசு அடிகள், சீவன் முத்தர்களை நமனணுகான் என்ற வுண்மையைக் கூறியிருத்தல் காண்க. எனையே என்பதில் உள்ள 'ஏ' அசை. காகா என்ற அடுக்குச் சொல் விரைவுப் பொருள் குறித்து நின்றது. சரணங்கள் என்பது இரண்டு திருவடிகள்; அது இங்கே திருவடி நீழலைக்குறிக்கிறது. நமனுர் செய்பணிக்கு ஆளாக்கும் பிறவிப் பாச வெப்பந்தணிப்பது முருகனது திருவடி வியாபக நீழலாதலின் சரணங்களிலே காகா நமனுர் கலகஞ் செயுநாள் என் என்றுர். முருகன் திருவடி யனுபூதி பெற்ற ஆசிரியருக்கு நமனுல் வரக்கடவதோர் இடையூறு இல்லையெனினும் முருகன் திருவடிகளிலேயே எப்பொழுதும் சலியாது நினைந்து கொண்டிருக்கும் ஆற்றலில்லாத அடியார்களை உய்விக்கு

வேண்டி அவர்கள்மேல் வைத்த பெருங்கருணையாலே அவர்களுக்கு அறிவுரையாக இந்தப் பாட்டைத் தம்மேல் வைத்து கூறியருளினார். முருகன், தனது திருவடி நிறைவில் அடங்கி இருக்கும் அடியார்களை நமனணுகாமல் காத்தருளுவன் என்பது இப்பாட்டின் கருத்து. இக்கருத்தை ஆசிரியர் இந்நூல் 10-வது பாட்டிலும், கந்தரலங்காரம் 50, 64 வது பாட்டுக்களிலும் கூறியருளினார்.

(42) குறியைக் குறியா தகுறித் தறியு
நெறியைத் தனிவே லைநிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையுமற் றதுவே.

(ப—ரை.)

குறியை - எல்லா வுயிர்களும் முடிவில்லையும் பொருளும் எங்கும் நிறைந்திருக்கும் பொருளுமாகிய முருகப்பிரானை;

குறியாது குறித்து - (காலம், இடம் வரையறைக்குட்பட்ட உலகப் பொருளைக் குறிப்பது போலக்) குறியாதும், அங்ஙனமாயினும் ஒருவர் அவனை யடைதல் வேண்டுமென்று வேட்கைகொண்டு;

(அறியாது) அறியும் - பாசஞானம், பசுஞானங்களாலறியாது பதிஞானத்தால் மட்டும் உணரும்;

நெறியை - ஞானத்தில் ஞானமாகிய சன்மார்க்கத்தை;

தனிவேலை - ஒப்பற்ற வேற்படை யேந்திய முருகக் கடவுள்;

நிகழ்த்திடலும் - மௌனகுருவாய் வந்து எனது உள் நின்றுணர்த்தின வுடனே;

உலகோடு - இவ்வுலகினோடு;

செறிவற்று - சேர்ந்திருத்தலாகிய செயலொழிந்தும்

உரைவற்று - உரைக்கேதுவாகிய வேட்கை யொழிந்தும்

சிந்தையுமற்று - சிந்தையில் நிகழ்வதாகிய அறிவொழிந்தும்

அறிவற்று - கருவியினாலறியுமொருபுடை யறிவொழிந்தும்

அறியாமையும் அற்றது - கருவியினால் நிகழும் அறியாமையும் அறவே நீங்கியது

(வி—ரை.)

இந்தப் பாட்டில் ஆசிரியர் தாமடைந்த முருகனது திருவடி யனுபூதியை உடன் பாட்டில் கூறவொண்ணாததால் உலகிலுள்ள மக்கள் அறிந்து உய்யும்படி அவர்மேல் வைத்த பேரருளால் அவர்களறியும் உலக வனுபவமுறையில் எதிர்மறை முகத்தாற் கூறினார். 28 வது பாட்டிலும், 30 வது பாட்டிலும் முருகனது திருவடி யனுபூதி நிலைமையைப் பிறரறியும் வண்ணம் கூற முடியாது என்று கூறிய வாசிரியர் அவர்களுக் கெப்படியாவது அறிவிக்க வேண்டுமென்ற பெருங் கருணை தமதுள்ளத்தில் நிகழவும், அவ்வனுபூதி நிலை பெற்றதனாலே உலகிலுள்ள துன்பத் தொடர்பு முற்றிலும் ஒழிந்துவிடுமென்று அவர்கள் ஒருவாறு அறியும் வண்ணம் கூறினார்.

குறி - வேதாகம நூல்களிலும், சித்தாந்த அருள்நூல்களிலும் முருகனல்லது சிவன், முடிவில் உயிர்களடையப் பெறும் குறிக்கோளாக கூறுதலால் குறியென்றார். "மல்லை ஞாலத்து வாழு முயிர்க்கெலாம், எல்லையான பிரானார்" என்று திருநாவுக்கரசு அடிகள் திருக்கடம்பூர் - திருக்குறுந்தொகை 6 வது பாட்டுக் கூறுதல் காண்க. குறியாது குறித்து - எங்கும் நிறைந்திருக்கிற முருகப் பெருமானை இடங் குறித்துக் குறிப்பது முடியாதாயினும் அவனையடைதல் வேண்டுமென்ற வேட்கை இன்றியமையாது வேண்டப்படுதலின் குறியாது குறித்து என்றார். அறியும் - குறியாது குறிக்கப்படும் பொருளை, அறியாது அறியவேண்டுமாதலின் அவாய் நிலையால் தொக்கி நிற்கும் அறியாது என்பதை வருவித்துப் பதவுரையில் பொருள் கூறப்பட்டது, நெறியை - பரமுத்திக் கேதுவாகிய சன்மார்க்கம் அல்லது நன்னெறியைக் குறிக்கிறது. இந்நன்னெறியானது காண்பான், காட்சி, காட்சிப் பொருள் என்னும் பாகுபாட் டுணர்வில்லாத அத்துவித துரியாதீத நிலையை யடைவிக்கும் நெறி. சிவஞான

சித்தியார் 8-ம் சூத்திரம் 22 வது பாட்டில் சன்மார்க்கம் விளக்கப்பட்டுள்ளது. தனிவேல்—ஐ (கடவுள்) தனிவேலை—சன்மார்க்கத்தை, முருகன் ஞான சக்தியால் உணர்த்துதலின் தனிவேலை யென்ருர். இந்த ஞான சக்தியில், இச்சாசத்தியும் கிரியாசத்தியும் அதன் கூறுபாடுகளாக அடங்கியுள்ளன வாதலின் ஞான சத்தியைக் குறிக்கும் வேலை மாத்திரம் கூறினுர். முதலிரண்டடிகளில் கூறப்பட்ட வுண்மையே,

குறியாக் குறியினிற் கூடாத கூட்டத்
தறியா அறிவில் அவிழ்ந்ததேக சித்தமாய்
நெறியாம் பாரநந்தி நீடருள் ஒன்றுஞ்
செறியாச் செறிவே சிவமென லாமே

என்று திருமூலர் திருமந்திரம் 2638 வது பாட்டிலும்

குறியுங் குணமுமறக் கூடாத கூட்டத்
தறிவறிவாய் நின்றுவிட வாங்கே—பிறிவறவுஞ்
சும்மா விருத்திச் சுகங்கொடுத்த மோனநின்பாற்
கைம்மாறு நானுெழிதல் காண்,

என்று தாயுமானவர் 539 வது பாட்டிலுங் கூறியிருத்தல் காண்க. பின்னிரண்டடிகளும் உலக வாழ்வுக்குரிய கட்டு நிலையில் நிகழும் வேட்கையறிவு செயல்களின் தொழிற்பாடு தமக்கு அறவே ஒழிந்துவிட்டது என்று ஆசிரியர் கூறுகின்ருர். உரை யென்பதிங்கே உரைக்குக் காரணமாயிருக்கிற வேட்கையைக் குறிக்கிறது. காரணத்தைக் காரியமாக உபசரித்துக் கூறினுர். சிந்தனை என்பது இங்கே சிந்தையில் நிகழும் அறிவு. இடத்தின் நிகழ்பொருள் இடமாகக் கூறப்பட்டது; இடவாகுபெயர். உலக வாழ்வில் கருவியால் மக்களறியும் சுட்டறிவில் அறிவோடு அறியாமையும் கலந்திருத்தலின் அறிவற்று அறியாமையும் அற்றது என்ருர். அருளாலறியு மறிவில், அறிவறியாமை யின்றி மெய்யறிவு மட்டுமுண்டாதலால் அங்ஙனம் கூறினுர். "அறிவறியாமை கடந்தறிவானுல், அறிவறியாமை யழகியவாறே",

உயர்ந்த வேலைப்பாட்டுக்குக் காரண்டி
அசல் வெள்ளிசாமான்களும், வெள்ளி நகைகளும்
உத்திரவாதத்துடன் கிடைக்கும் இடம்.

**வ. ரு. புருஷோத்தம செட்டியார்**

தங்கம், வெள்ளி நகை வர்த்தகம்
(பூஜைக்குகந்த வெள்ளி உருவப் படங்களும் கிடைக்கும்)
நெ. 47, சைனாபஜார் ரோட்டு, சௌகார்பேட்டை, மதராஸ்.

---

**வெகு சரசம்! உத்திரவாதம்!!**

எங்கள் சொந்த தறியில் தயார் செய்யும்

**பட்டு-பாவாடை, ஜரிகை-ரவிக்கை.**

**பட்டு-சேலை தினுசுகள்**

**சாயத்திற்கும் ஜரிகைக்கும்**

உத்திரவாதத்துடன் கொடுக்கப்படும்.
வேண்டியவர்கள் உடனே ஆர்டர் செய்யவும்

**கே. எஸ். காளத்தி முதலியார்,**

**ஆதிநாராயண முதலியார்.**


பட்டுஜவுளி வியாபாரம், திருக்கச்சிநம்பிதெரு, சின்னகாஞ்சிபுரம்

---

## குலசேகரன் பட்டினம்
## முருகானந்தசபையின் வெள்ளிவிழா.

திருமுருகன் திருவருளால் ஷை சபையின் 25ஆம்ஆண்டு நிறைவு விழாவாகிய "வெள்ளிவிழா" நிகழும் மெய்கண்டான்யாண்டு எளகக தைத்திங்கள் க௨ முதல் கூ௨ (14-1-42 முதல் 19 - 1 - 42) முடிய மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. க பொங்கல்விழா உ. காவடிவிழா ங. திருமுறைவிழா ச. தமிழ் நெறிச்சித்தாந்த விழா ரு. அறிவுரைவிழா சா. சோறூட்டுவிழாவும் ஊர் வலவிழாவும் என சா பகுதிகளாக முறையே சா நாட்களிலும் கொண்டாடப் பெற்றன. திருவாளர்கள் ப. இராமநாதபிள்ளை, துரைசாமி முதலியார், ம. சோ. வயிரவநாத பிள்ளை **G. K.** பகவதி முதலியோர் அவ்வப்பொழுது தலைமை வகித்தனர். திருவாளர்கள் ஸ்ரீனிவாசகம் பிள்ளை, முத்தவணங்கு பெருமாள் பிள்ளை, வித்வான் ஆ. சிவலிங்கம், ஆறுமுகனேரி சண்முகம் பிள்ளை, வித்துவான் ந. சேதுரகுநாதன், திருநாவுக்கரசு நாகர்கோவில் ஆறு முகம் பிள்ளையவர்கள். சென்னை குகஸ்ரீ கிருபானந்தவாரி அவர்கள் முதலியோர்கள் சொற்பொழிவாற்றினர். காருகுறிச்சி திரு. ஆவுடையப்ப செட்டியாரவர்களால் உ௨ சேந்தனார் சரித்திரக் காலக்ஷேபம்நடந்தது. ங௨ வரகவி மாரியப்ப சுவாமி அவர்களும், ரு௨ திருநெல்வேலி சுந்தரஓதுவாமூர்த்திகளும் இன்னிசைக் கச்சேரிகள் நிகழ்த்தினர்! உ௨ சபை அமைச்சர் திரு. சிவ மங்களமுடையார் அவர்கள் புத்திரன் ம. சிவசுப்பிரமணியன் முத்திரை தரித்துக் காவடிஎடுத்தான் சா௨ பகல் 12 மணிமுதல் மாலை 5 மணிவரை வறியவர்களுக்கு வளம்பெறச் சோறூட்டப்பெற்று, இரவு 8 மணிக்கு முருகன் திருவுருவப்படங்களின் ஊர்வலம் வந்து விழா இனிது முடிவுற்றது.

தந்திவிலாசம் “செமந்தகா” திருச்சி.



கிருஷ்ண பரமாத்மாவின் கிரீடத்தை அலங்
கரிக்கச் செய்தது செமந்தகமணி.

ஆனால்

இவ்வுலக மக்களின் அழகை அலங்கரிக்கச்
செய்வது செமந்தகா வைரங்கள்.

என்று

இதுவரையில் செமந்தகா வைரங்களை
வாங்கிப் பூரண திருப்தி அடைந்தவர்களால்
போற்றப் படுகிறது.

இன்றுவரை வெளிவந்துள்ள வைரங்களில்
தலை சிறந்தது.

எமது

**“செமந்தகா வைரங்களை”**

உறுதியிலும் ஜொலிப்பிலும் அசல்
வைரங்களைப் போன்றது.

ஒரு முறை பரிக்ஷித்துப்பாருங்கள்.

தோடு சைஸ் வைரம். பேசரி சைஸ் வைரம்.
1-க்கு 0—8—0. 1-க்கு 0—6—0.

கிடைக்குமிடம்:---

**மோதிரங்கய்ய செட்டியார் சன்ஸ்**

நகை வியாபாரம், திருச்சி.

மற்ற ஊர்களில் எமது அதிகாரம் பெற்ற
ஏஜண்டுகளிடம் மட்டும் கிடைக்கும்.

ஏஜண்டுகள் தேவை.

*Printed by M. Madhusoodana Sivam at the THIRUPPUGAZH AMIRTHAM PRESS 2-7 Aiyah Mudali St. Chintadripeta: Edited & Published by Guhasri KRIPANANDAVAR at 108 Suami Naicken Street: Chintadripet Madras:*